விலைசதம் 50 ★ பக்கங்கள்—8

# ஈழநாடு வார மலர்

THE EELANAADU VAARAMALAR

சலவைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

துர்த சலவைக்கும், இக்களத் திற்கும் சிறந்த 'மில்க்வைற் சலவைப் பவுடரை' உப யோகியுங்கள். ஒரு இருத்தல் பைக்கட்டுகளாக விற்பனை யாகின்றது. கூடுதல் கொள் வனவிற்கு விசேட கழி வுண்டு.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## இராணுவ-பொலிஸ் சாகஸ விளையாட்டு

(கொழும்பு)

இராணுவமும், பொலிசும் இணைந்து நடாத்தும் சாகஸ விளையாட்டு நிகழ்ச்சி ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா வழங்கியுள்ளாராம்.

மலர் 20 | மாசி 38 | ரபி: ஆடி 2 | ஞாயிற்றுக்கிழமை | [13—8—78] | இதழ் 30

# 'தமிழ்ப் பெண்ணின் தாலியை 5 பேர் பிடித்து இழுத்தனர்'

## யு. என். பி வவனியா அமைப்பாளருக்கு குண்டர் தலைவன் பாதுகாப்பளித்தார்

### சன்சோனிக் கமிஷன் முன் சந்திரகாசன் சாட்சியம்

(நமது நிருபர் கா. யோகநாதன்)
(யாழ்ப்பாணம்)

நான் இருந்த ரயில் பெட்டிக்குள்ளிருந்த தமிழ்ப் பெண்ணின் தாலியை 5 குண்டர்கள் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தனர். அப்பெண்ணின் 5 வயது மகள் 'தாலியைக் கொடுங்கோ கொடுங்கோ, கொல்லப்போறுங்கள்' என்று கத்தியது. தாலியைக் கழட்ட தலைமயிர் தடையாக இருந்தது. ஒரு குண்டர் தலைமயிரை வெட்டப்போனபோது 'வெட்டவேண்டாம், அப்பெண் கழட்டித் தருவார்' என்றேன். அப்பெண் தாலியைக் கழட்டிக் கொடுத்தார்.

என்னைத்தாக்கிய குண்டர்கள் என் கைக்கடிகாரத்தையும், பேர்சையும் பறித்தனர். 'வீட்டுக்குப் போக பணம் வேண்டுமே' என்றேன். அக்குண்டர் ஒரு பத்து ரூபா நோட்டுடன் பேர்சைத் தந்தார்.

ரயில் பெட்டியிலிருந்த வவனியா யூ.என். பி. அமைப்பாளர் புலேந்திரனை அடையாளம் கண்ட குண்டர் கோஷ்டித் தலைவன் அவருக்கும், அவருடன் வந்தவருக்கும் பாதுகாப்பு அளித்தான்.

"யாழ்ப்பாண தமிழர் எங்கள் பொலிஸ்காரரை அடிக்கிறார்கள்" என்று குண்டர்கள் ரயில்பெட்டியில் கூறினர்.

முதலிலுல் செல்வநாயகத் தின்புதல்வர் திரு எஸ்.சி.சந்திரகாசன் நேற்று சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சன்சோனிக் கமிஷன் விசாரணை இம்மாதம் 30-ந் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. நேற்று அனுராதபுரத்தில் தாக்குதலுக்குள்ளான பல பெண்களும் சாட்சியமளித்தனர்.

சட்டத்தரணி சந்திரகாசன் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

ஆகஸ்ட் 16-ம் திகதி இரவு மெயில் ரயிலில் கொழும்பு சென்றேன். யாழ்ப்பாணம் ரயில் 1 ம் பிளாட்பாரத்தில் வந்து நின்றது, எங்கள் ரயில் 3ம் பிளாட்பாரத்தில் நின்றது.

#### பார்த்துக்கொண்டு நின்றனர்

ரயில் நின்றதும் சத்தம் கேட்டது. நான் 2ம் வகுப்பு பெட்டியில் பிரயாணம் செய்தேன், எனது பெட்டி பின்னுக்கு இணைக்கப்பட்டிருந்தது. குண்டர்கள் ரயிலில் தமிழ் பிரயாணிகளைத் தாக்கிக் கொண்டிருந்தனர். ஆயுதம் தாங்கிய பொலிசார் பிளாட்பாரத்தில் பார்த்துக்கொண்டு நின்றனர்.

கமிஷனர்; பொலிசார் பார்த்துக்கொண்டு நின்றனரா?-ஆம் தாக்குதல் திட்டமிட்டபடி நடந்துகொண்டிருந்தது.

2 பொலிஸ்காரர் றைபிளுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

திடீரென்று ரயில் கொழும்பு நோக்கி சிறிது தூரம் சென்று பிளாட்பாரத்திற்கு அப்பால் நின்றது. குண்டர்கள் தொடர்ந்து தாக்கிக் கொள்ளையடித்தனர்.

இலிப்பநேட்பெட்டியன்னல் கதவுகளைப் பிரயாணிகள் மூடிக்கொண்டனர், அப்பெட்டிகள் பூட்டப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நான் ஏறும்போது பொலிசாரும் அப்பெட்டியில் பிரயாணம் செய்வதை அவதானித்தேன். கொழும்பிலிருந்து வந்த ரயிலில் ஒருவன் பொலிசாரை அவதானிக்கவில்லை.

நான் ஒரு கட்டத்தில் பொலிசாரிடம் சென்று இதனை நிறுத்துமாறு கூற விரும்பினேன், ஆனால் கொள்ளையடித்த குண்டர்கள் பொலிசாருக்கருகில் வந்து நின்றதை அவதானித்

[3ம் பக்கம் பார்க்க]

## கச்சதீவில் இலங்கை யாத்திரிகர் ஏமாற்றம்!

(கச்சதீவு)

பண்டமாற்று நோக்கத்துடன் இங்கு வந்த இலங்கை யாத்திரிகர்கள் பலத்த ஏமாற்றமடைந்தனர், இந்திய யாத்திரிகர்கள் குறைவாக வந்ததே காரணமாகும்.

கடந்த வருடத்திலும் பார்க்க இம்முறை கூடுதலான இலங்கை யாத்திரிகர்கள் வந்திருந்தனர்.

நேற்றுக் காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. சே பஞ்சலிங்கம் ஆகியோர் வந்து மாலையில் திரும்பினர், கிளிநொச்சி எம். பி, திரு. ஆனந்தசங்கரியும் நேற்று வந்தார்.

பொலிசாரும் இராணுவத்தினரும் அமைதியாகக் கடமை செய்வதால் யாத்திரிகர்கள் நல்ல நோக்குடன் வந்திருந்தனர்,

அமரர் குமாரசாமியின்

## இறுதியாத்திரை இன்று கொழும்பில் நடக்கும்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் காலமான முன்னாள் சாவகச்சேரி எம். பி திரு வி குமாரசாமியின் இறுதி கிரிகைகள் இன்று மாலை 4-30 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறவிருக்கின்றது.

பம்பலப்பிட்டி இல்டன் பிளேஸிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பூதவுடல் இறுதி யாத்திரைக்காக எடுத்துச் செல்லப்படும்.

முன்னாள் அமைச்சர்கள் குமாரசூரியர், கலுகல்ல, மற்றும் பிரமுகர்கள் பலர் நேற்று காலஞ்சென்ற தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்

### வி. என். அனுதாபம்

அமரர் குமாரசாமிக்கும் எனக்குமிடையில் அரசியல் கருத்து வேறுபாடுகள் நிறைய இருந்தாலும் கூட என்னுடன் மிக அன்புள்ளவராக அவர் இருந்தார்.

அவரின் மரணச் செய்தியைக் கேட்டதும் நான் அதிர்ச்சியடைந்தேன். எனக்கு அச்செய்தி தாங்கொணு துயரத்தைத் தந்தது.

"இவ்வாறு சாவகச்சேரித் தொகுதி பா. உ. திரு. வி. நவரத்தினம் திரு. வி. குமாரசாமியின் மறைவையொட்டி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்'

திரு வி குமாரசாமியின் மறைவுக்கு அகில இலங்கை முன்னேற்றத் தமிழர் அபிவிருத்தி இயக்கமும் தமிழ்ஈழ ஜி ஜி காங்கிரஸும், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியும் தனித்தனி அனுதாபச் செய்திகள் வெளியிட்டுள்ளன,

சாவகச்சேரி கொடிகாமம், கைதடிச் சந்திகளில் கறுப்பு வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன [ம-ள]

# திருமண அழைப்பு

மணமகன்: செல்வன் நா.பாலசுப்பிரமணியம்
மணமகள்: செல்வி ஜெயலட்சுமி
இடம்: மணமகன் இல்லம்
(புலோலி மேற்கு, பருத்தித்துறை)
முகூர்த்தம்: 2-ந் திகதி பங்குனி மாதம்
புதன்கிழமை (16-3-78) இரவு
2-30 மணிக்கு

உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கிருஷ்ணபிள்ளையும் பாரியாரும்
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

தி. நாகமணியும் பாரியாரும்
வத்தனை புலோலி மேற்கு, பருத்தித்துறை.

[8729]

---

மீண்டும் கிடைக்கின்றது

வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட

## பிக்பென் BIG BEN-ALARM

அலாரம் மேசை மணிக்கூடுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் உண்டு.

## ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை

213, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256. 8736

---

## ப. நா. கிருஷ்ணகுமார் அன் கோ

பருத்தித்துறை

பருத்தித்துறை-உடுப்பிட்டி-காங்கேசன்துறை தொகுதி பீடி விற்பனையாளருக்கு

### ஓர் முக்கிய அறிவித்தல்

சிறிலங்கா புகையிலை கைத்தொழில் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்யும்

### ஜனதா ஸ்பெஷல் பீடியை

பருத்தித்துறை, உடுப்பிட்டி, காங்கேசன்துறை தொகுதிகளில் விநியோகம் செய்வதற்கு மேற்படி கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிவிக்கிறோம்.

உங்கள் தேவைகட்கு உடனே தொடர்புகொள்ளவும்:-

## ப. நா. கிருஷ்ணகுமார் அன் கோ.,

(General Merchants Distributors. Millers & Transport Agents)

பிரதான வீதி, பருத்தித்துறை.
8720

---

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

# வெற்றிடம்

### பொது முகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் யாவும் அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 04-04-78ம் திகதிக்கு முன்னதாக, தலைவர், கடற்றொழிலாளர், கூட்டுறவுச்சங்கம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். தபால் கடிதவுறையில் இடதுபக்க மூலையில் "விண்ணப்பம் பொதுமுகாமையாளர் தரம் III" எனக் குறிப்பிடவேண்டும்.

தகைமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி, அல்லது
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தராதரப் பத்திரம் அல்லது
3. 5 வருட காலம் அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
4. ரூபா 20,000/-இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபார ஸ்தாபனம் ஒன்றில் 3 வருடகாலம் அனுபவமுடையவர் ஒருவர்.

வயது:- 23-க்கும் 50-க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்:- 340—590 / 15/10—20/-

மேற்கொண்டு விபரம் தேவைப்படின் 12-5-72-ம் திகதிய 15009/ஏ12 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

தலைவர்
முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்,
03 03 78 முல்லைத்தீவு. 8715

---

## வரி விளம்பரம்

### தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்கி வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை விபரங்களுக்கு நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ் இல 31 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். 8716

---

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான விளையாட்டுப் பொருள் உற்பத்திசெய்யும் ஸ்தாபனம் ஒன்றிற்கு மிகவும் திறமையுள்ள ஓவியம் தீட்டுபவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. முடிவு திகதி 25-3-78. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 8734, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8734

---

திருகோணமலையில் நல்ல நிலைமையில் இயங்கும் ரக்ரர் வேலைத்தலத்திற்கு, மெக்கானிக்மார், எலெக்றிக் வெல்டர், சப்போட் வேலை தெரிந்தவர்கள், நற்சான்றுப் பத்திரங்களுடன் உடிதமூலம் தொடர்பு கொள்ளவும் முகாமையாளர், சிலோன் மோட்டார் என்ஜினியேர்ஸ், 322, மத்தியவீதி, திருகோணமலை. 8680

---

யாழ்ப்பாணம் பஜாரில் பலசரக்கு வர்த்தக ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் மனுச்செய்யவும் விளம்பர இல 8714, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8714

---

சைக்கிள்- 12 வயது மாணவனுக்கு நல்ல நிலைமையிலுள்ள சிறிய றலி சைக்கிள் தேவை. விளம்பர இல. 8724, மே/பா. ஈழநாடு. யாழ்ப்பாணம். 8724

---

### விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரி, காங்கேசன்துறை, கஸ்தூரியார் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் இல்னர் வீதியில் 2½ பரப்புக்காணி 187/9-ம் இலக்கத்தைக்கொண்ட நவீன வசதிகளுடன் வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு து. இரத்தினகோபால், 185/9, இல்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8731

---

சண்டிக்குளி மரத்தடி வீதியில், 5 பரப்புக் காணி, பகுதியாகவோ அல்லது முழுமையாகவே விற்பனைக்குண்டு. விலை பரப்பு ஒன்று சுமார் ரூபா 16,000. விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 16, சோமசுந்தரம் அவென்யு, சண்டிக்குளி. 8727

---

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் பொம்மைவெளி என்னும் இடத்தில் 9 பரப்பு விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும், கடை கட்டுவதற்கும் பொருத்தமான இடம். நேரிலோ, விண்ணப்பித்தோ தகவல் பெறலாம். ம. நடராசா, 6, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் 8730

---

முறமாலையில், எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்துக்கு முன்பாக போக்குவரத்து வசதியுள்ள 60 ஏக்கர் தென்னந்தோட்டம், காய்க்கும் பருவமுள்ள தென்னைகளுடனும், கிணறுடனும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: கனகரத்தினம் கேசவன், சட்டத்தரணி, சிவஸ்தான், நல்லூர், யாழ்ப்பாணம். 8735

---

பௌத்த விகாரையில்

# குண்டர்கள் திரளுவதை பூதக்கண்ணாடியில் பார்த்தோம்

## விரிவுரையாளர் நரேந்திரன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக வளாக விரிவுரையாளர் டாக்டர் பாலசிங்கம் நரேந்திரன் சன்சோனி கமிஷன் முன் அளித்த சாட்சியத்தின் ஒரு பகுதி நேற்று வெளியாயிற்று. எஞ்சியபகுதி இங்கே தரப்படுகிறது:

2-ம் தாக்குதல்பற்றி குருநாகல் பிஷப் வண லக்ஷ்மன் விக்கிரமசிங்கா அறிவித்தார் அவர் இதில் தலையிட்டு உடைமைகளுக்கு சேதம் ஏற்படாமல் தடுக்கப்பார்த்தார். அவர் நானிருந்த வீட்டுக்கு வந்தார். வண. பிதா கனகரத்தினம், தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் சோம பெரேரா ஆகியோரும் வந்தனர்.

கொள்ளை நடந்த பின் கிராமத்தவர் வந்து மிகுதிச் சாமான்களை கொண்டுபோய் விட்டதாக அறிந்தேன்.

குருநாகல் பிஷப் காரில் சென்றதும் குண்டர்கள் அவரை இதில் தலையிடவேண்டாமென்று எச்சரித்ததால் அவர் திரும்பி வந்துவிட்டார். அவர் முயற்சி தோல்வியடைந்தது.

நாங்கள் மாமா வீட்டில், தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும்போது குண்டர்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் இருக்கும் தமிழர்களையும் தாக்கப்போவதாக தகவல் கிடைத்தது.

அங்கு 3 தமிழ்க்குடும்பங்கள் இருந்தன. என் குடும்பம் நான்காவது குடும்பம்.

### தூரதர்சினிமூலம் குண்டர்கள் திரளுவதைக்கண்டேன்

எங்கள் வீட்டிலிருந்து தூரதர்சினிமூலம் அங்குள்ள பௌத்த விகாரையில் குண்டர்கள் திரளுவதைப் பார்த்தோம். -குண்டர்கள் ஊரடங்குச் சட்டத்தையும் பொருட்படுத்தாமல் தொழில் நுட்பக் கல்லூரியைச் சூறையாட திட்டம் தீட்டிக்கொண்டிருந்தனர்.

அடுகுணுவ பொலிசாருக்குப் போன் பண்ணினேன். பொலிஸ் நிலையத்தினர் நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர். தொழில் நுட்பக்கல்லூரி தங்கள் பிரிவுக்குகீழ் வரவில்லை என்று கூறிவிட்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

---

### தேவை

விற்பனை அபிவிருத்தி உத்தியோகஸ்தர். விவசாய, வீட்டுப் பாவனைப்பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஆற்றலும், ஆர்வமும் உள்ள விற்பனை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தேவை அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களுடன், சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 8723

---

## மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# தேவை

## அச்சக வேலையாட்கள்

### பிளேட்டின்

பிளேட்டின் மெசினில் கலர் வேலை உட்பட எல்லா வேலைகளும் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும்.

### சிலிண்டர்

பக்கங்கள் கட்டுவதுடன் மற்றும் சிலிண்டர் சம்பந்தமான சகல வேலைகளும் தெரியவேண்டும்.

### பயின்டர் றூலர்

லெட்ஜர் பயின்டிங் லெதர் பயின்டிங் உட்பட எல்லா பயின்டிங் வேலைகளும் றூலிங் மெசினில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்குக் குறைவில்லாத வேலை செய்த அனுபவமும்

### கொம்போசிங்

மூன்று மொழிகளிலும் வேலை செய்யக்கூடியதாகவும் சொலிட் ஜொப் வேலைகளில் நல்ல திறமை உள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

மேற்படி தனித்தனி வேலைகளுடன் அச்சகத்திலுள்ள இன்னும் குறைந்தது இரண்டு வேலைகளாவது தெரிந்திருக்கவேண்டும்.

வயது 25-க்கு மேல் 40-க்குள், 10 வருட அச்சக அனுபவம், கல்வித்தகைமை குறைந்தது 8-ம் வகுப்பு சித்தியடைந்திருக்கவேண்டும்.

சங்க எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அச்சக வேலையிலிருந்து விடுபட்டு தற்போது வேறு வேலைகள் செய்பவர்கள் எவ்வளவு காலம் என்பதைக் குறிப்பிடவும்.

அச்சடிப்புத் தொழில் சம்பள நிர்ணய சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

சங்கத்திலிருந்து ரூபா ஒன்று கட்டிப்பெறப்படும் படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். முன்பு விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

கூட்டுறவு ஆணைக்குழு சுற்று நிருபத்தின்படி பிணை கட்டக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

23-3-78-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி.

பொதுமுகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய். 8732




# ஏழையின் கண்ணீர்!

**க. கலாமோகன்**

“ஐயா தர்மம் தாங்கோ?” என்ற குரல் பஸ்நிலையத்தினுள் கணீரென ஒலித்தது. அந்த ஒலிக்குரிய சிறுமியினைக் கண்டும் காணாதவராகச் சிலர் நடித்தனர். மற்றும் சிலரோ மனம் நெகிழ்ந்து சில சில்லறைகளை அந்தச் சிறுமியின் கையிலுள்ள பாத்திரத்தில் இட்டனர். வேறு சிலரோ சினங்கொண்டு திட்டித் தீர்க்கவும் தவறவில்லை. இவர்களது பல்வேறுபட்ட நிலைகளையும் பகுத்து அறியமுடியாத அந்தச் சிறுமி “ஐயா தர்மம் தாங்கோ!” என்று தனது ஜீவனோபாயத்திற்காகக் குரலெழுப்பியவண்ணம் மெல்ல மெல்ல நகர்ந்தாள்.

அவளுக்கு வயது பத்துக்கு மேல் இருக்காது. வாரிவிடப்படாத கேசம் அவளது மேனியில் சுதந்திரமாகத் தவழ்ந்தது. இனிமேல் தைப்பதற்கு இடமே இல்லையென்ற அளவிற்கு மோசமான ஓர் ஆடை அவளை அணைத்தவண்ணம் இருந்தது. அவள் வாழ்க்கையைத் தொடங்கிவிட்டாள்! கையிலுள்ள பாத்திரம் கனத்தது. மறுகணம்...

“இன்னிக்கு தம்பிக்குஉடுப்பு வாங்கலாம். தம்பி பாவம். அவனிடம் உடுப்பு ஒன்றுமே இல்லை. இன்னிக்கு வாங்கலாம்” என்று அவளது குழந்தையுள்ளம்எண்ணியது. தனது உடன்பிறப்பு உடுத்து மகிழ்வதில்தான் அவளுக்கு எத்தனை மகிழ்ச்சி. மகிழ்ச்சிமேலிட ஒரு ஒழுங்கையினுள்ஓடினாள். அந்த ஒழுங்கைக்குள் ஒரு மூலையில் அடுப்பு ஒன்று புகைத்துக் கொண்டிருந்தது. அதன் அருகே கைக்குழந்தையுடன் மாரி நிலத்தில் படுத்துக்கிடந்தாள்- அவளது அன்பிலே குழந்தை ஒன்று பிறந்தமேனியுடன் கிடந்தது- அதன் உடம்பெல்லாம் புழுதிமயமாயிருந்தது- அத்துடன் அதனது தொப்புழ் கூட ஒட்டியுலர்ந்திருந்தது.

“என்னடி செப்பி இவ்வளவு நேரமும் பஸ்ராண்டிலே என்னடி செய்துகொண்டிருந்தே” என்று தன்முன் பிச்சைப் பாத்திரத்துடன் நின்றுகொண்டிருந்த அந்தச் சிறுமியைப் பார்த்துக் கேட்டாள் மாரி- அவளோ மறு பேச்சுப்பேசாமல் தாயிடம் பிச்சைப்பாத்திரத்தைக் கொடுத்தாள்.

சில்லறைகளைக் கொட்டி எண்ணிய மாரி;

‘நேத்தைக்கும் பரவாயில்லைப் போலிருக்கு. இன்னிக்கு ஒரு சதம் குறைவா தானே கிடைச்சிருக்கு. நானும் வருத்தந்தாம் பரவாயில்லை. ஆறு எழும்பி நடக்க! இந்தக் காச்சல் விட்டத்தானே’ என்று வாயில் வந்தபடி புலம்பினாள் மாரி. பின்.

‘ஓடிப்போயி ஒரு ரூத்தல் பாண் வாங்கி வாடி. செப்பி’ என்றவாறு சில்லறைகள் சிலவற்றை எண்ணிச் செப்பியிடம் கொடுத்தாள் மாரி. சில்லறைகளை வாங்கிக்கொண்டு சிட்டாகப் பறந்த செப்பி, சிட்டாகவே திரும்பிவந்தாள். ஆனால் கையில் பாண் இல்லை.

‘பாணுக்குக் காசு காணாதாம்’ என்றவாறு சில்லறைகளைத் தாயிடம் நீட்டினாள். சில்லறைகளை எண்ணிப் பார்த்த மாரி.

‘என்னடி பாணுக்குக் கணக்காகத்தானடி காசு தந்தேன். ஆனால் 6 சதம் குறையுதே, எங்கேயடி போட்டுட்டு வந்தே; நாம் படுகிற துன்பம் உனக்குத் தெரியலையா. ஏனடி கவனமாகக் கொண்டு செல்லவில்லை.’ என்றவாறு அருகே நின்ற பூவரசு மரத்திலிருந்து ஒரு தடியைப் பிடுங்கினாள், மறுகணம் செப்பியை கதறக் கதற அடித்தாள்.

‘இந்த இடத்தை விட்டு அசையக்கூடாது’ என்ற வண்ணம் பாண் வாங்குவதற்காகத் தானே விரைந்தாள். உடம்பெல்லாம் கொதித்தது. அதே வேளையில் காலைக் கதிரவனும் கொதிக்கத் தொடங்கினான்.

மாரி வேகமாக நடந்தாள். அவள் நடந்துகொண்டிருக்கும் போது நடந்து முடிந்த சம்பவங்கள் அவள் நினைவில் ஆடின.

அவள் ஒரு நாடோடி வகுப்பைச் சேர்ந்தவள். பருவம் பூத்தபடன் திகழ்ந்த மாரி செல்வபுரத்திற்குத்தன் தாய், தந்தையர்களுடன் வந்தாள். அவ்வப்போது கூலி வேலைசெய்வதால் அக்குடும்பம் ஒருவாறு ஓடியது.

பகலில் தெருத்தெருவாகத் திரிவார்கள். இரவிலே எங்காவது மூலைகளில் முடங்கிக் கொள்வார்கள். இரவும் பகலும் வாழ்க்கைப் பிரச்சினை தீர ஏதாவது நிலையான வேலை கிடையாதா என்ற ஏக்கம்.

மாரியின் பருவச் செழிப்பைக் கண்டு அவளை அடைய நினைத்தனர் சில நாடோடிகள். நாடோடியாக அவள் இருந்தபோதும், அவள் ஒழுக்கமரபைக் காத்திடத் தவறவில்லை. எனவே, மணாளன் ஒருவனைக் கைப்பிடித்தாள். தந்தை, தாய்க்கும் பாரமாக இருக்காது அவள் வேறொரு இடத்திற்குச் சென்றாள். அங்கும், ஒரு ஒழுங்கையிலுள்ள மூலையை இருக்கையாகக் கொண்டாள். இப்படி இருக்கையிலேயே செப்பி பிறந்தாள். மறு குழந்தை வயிற்றிலே இருக்கும்போதுதான், மாரியின் கணவன் திடீரென இறந்தான். இதன் பின் மாரியின் தலையிலே பொறுப்புக் கூடியது. எனவே தாயும் இருசேயும் தெருத்தெருவாய் இரக்கவேண்டிய நிலை. நினைவலைகள் கலைகின்றன. மாரியும் வந்த அலுவல் முடித்துக்கொண்டு விரைகின்றாள். விரையும் போது, ‘செப்பிக்கு ஏன் தான் அடித்தோம்’ என்று அந்தஅன்னை உள்ளம் எண்ணத் தவறவில்லை.

●

இரவு கலைந்தது காலை புலர்ந்தது.

‘ஏண்டி! இவ்வளவு நேரமாத் தூங்கிறாய், எழுந்து வாடி! ஒருவாறு இன்னிக்குக் கொஞ்சம் சுகம். நேரத்தோட போனால், முதல் பஸ் வாறவங்க ஏதாச்சும் தருவாங்க’ என்று விடிந்ததும் விடியாததுமாகச் செப்பியை எழுப்பினாள் மாரி’ வயிற்றுப் பிரச்சினைதான் வாழ்வின் முதற் பிரச்சினையல்லவா! மாரியும், செப்பியும் பஸ் நிலையத்தை அடைய, முதல் பஸ்சும் கணக்காக வந்து நின்றது. பட்டினிக் கோலத்தில் நின்ற அவர்களைக் கண்டு சிலர்,

‘இதுகளில்தான், இன்டைக்கு முழுவியளம், என்ன நடக்குமோ’ என்று முணுமுணுக்கத் தவறவில்லை. அவர்கள் எப்படி அறிவார்கள், சமூக அமைப்பின் ஒழுங்கீனமே இத்தகைய நிலைகளுக்குக் காரணம் என்பதை!

வழமைக்கு மாறாக, சில்லறைகள் அதிகம் சேர்ந்ததில் மாரிக்கு மிக்க மகிழ்ச்சி. கைக்குழந்தை மெல்ல அழுதது.

‘அம்மா! தம்பிக்கு பசியம்மா! என்றாள் செப்பி.

‘செப்பி! அந்தச் சந்திக்கு அப்புறமாய் இருக்கும் கடையிலே போயி தம்பிக்கு இடியப்பம் வாங்கியாம்மா’ பத்திரமாக கவனமாகப் போவனும்’ என்றவாறு சில்லறைகளை எண்ணி செப்பியிடம் கொடுத்தாள் மாரி.

சில்லறைகளைப் பெற்றுக்கொண்டு சிட்டாகப் பறந்தாள் அவள்.

சந்தியைக் கடந்து, இடியப்பத்தையும் வாங்கிவிட்டாள். மீண்டும் சந்தியைக் கடக்க முற்பட்டாள்;

இந்தவேளை பார்த்துத் தானா அந்தப் பொல்லாத பஸ் வரவேண்டும்!

பஸ் வந்த வேகத்தில் செப்பி திகைத்து, அப்படியே சந்தியில் நின்றுவிட்டாள். எனவே, அவளை மோதி நசித்தது. ஒரு கணம் துடிதுடித்தது உடல், மறுகணம் அடங்கிவிட்டது.

விபத்து நடந்த இடத்தில் கூட்டம் கூடியது. விபரமறியாத மாரி, கூட்டத்தைக் கண்டு வியரமறிய ஓடிவந்தாள் அங்கே! இரத்த வெள்ளத்தில் செப்பியைக் கண்டாள். சில்லறைகள் கீழே வீழ்ந்தன.

‘ஐயோ’ என்று அலறியவாறு செப்பியை எடுத்து அணைத்தாள். பக்கத்தில் நின்றவர்கள் ஒருவாறு தாயையும், சேயையும் வேறு பக்கத்திற்குக்கொண்டு சென்றனர்.

மாரியின் ஓலம் மட்டும் ஓயாது இருந்தது.

அந்த இடத்தில் இரத்த வெள்ளத்தில் ஊறிய சில இடியப்பங்கள் ஏழையின் கண்ணீரை நினைவூட்டிக்கொண்டிருந்தன.

[யாவும் கற்பனை]

## நகைச் சுவை

# என்ரை அவர் ஈரானில் வேலை....

**கலகலப்புதீசன்**

அவர் போய் 1½ மாதம் தானப்பா, மோட்டார் சைக்கிள் ஒன்று வாங்கினவராம். படம் எடுத்து அனுப்பினார் நல்லவடிவப்பா (மோட்டார் சைக்கிளோ அல்லது அவரோ? தெரியாது.) நீர் உதைக் கதைத் திரப்பா எனக்கு முந்தி லெட்டர் தந்து என்னை காதல் வானம் படம் பார்க்க வரச் சொன்னர். அவர் போய் 5 மாதம் தான்; பென்ஸ்கார் ஒன்று வாங்கி, அதோட நின்று படம் எடுத்து அனுப்பியிருந்தார்; நீர் பார்க்கேல்லியா? எனக்கும் ரிக்கற் அனுப்பப்போறாராம்....

இப்படி சில பாடசாலை மாணவிகள் பள்ளிக்கூடநேரத்திலும் பஸ்ஸிற்குள்ளும் கதைத்திருப்பார்கள்; கதைப்பார்கள். (இதைவிட பாடசாலை மாணவிகளுக்கு கதைக்க கதையுமில்லைத்தானே?) அவர்கள் கதைப்பது உண்மைதான் ஏனென்றால் இங்கிருந்து இவர்கள் எழுதுவதைத்தானே அவர்கள் அங்கு கதைப்பார்கள்.

இலங்கையில் பிள்ளைபிடிகாரர்கள் எப்படி இருந்தார்களோ? அப்படித்தான் ஈரானில் படம் பிடிப்பவர்கள் கையில் கமராவும் கையுமாக அலைவார்கள். வைரவருக்கு நாய்கிடைத்ததுபோல இவர்களுக்கு ஒரு மோட்டார்சைக்கிள். ஈரானுக்கு புதியவர்களை இவர்களுக்கு தெரியும். முகத்தில் பார்த்து பிடித்துவிடுவார்கள். எம்மவரின் ஆசையை அறிந்து மோட்டார் சைக்கிளைக் காட்டுவார். ஒரு கிளிக் ...... என்று அவர் மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டார், நல்ல வடிவப்பா...... இது தான் கதை. செலவு 250 தியால். கிட்டத்தட்ட 3 டொலர் 48 ரூபா. அடுத்தது கார் அதுவும் பென்ஸ். கார்பார்க்கில் தமது திறத்திற்கு பொருந்தக்கூடிய பென்ஸ் காரை தேடிப்பிடித்து கமராவில் முகம் கொடுக்க ஆசைப்படும் ஒரு ஈரானியனையும் சேர்த்து படம் பிடிப்பார்கள். கிளிக்... அவர் ஈரானில் கார் அதுவும் பென்ஸ். பக்கத்தில் நிற்பதுதானும் ட்றைவர்.

இந்தப்படம் இலங்கையில் 100 நாடகளுக்கு மேல் ஓடும் அதாவது உறவினர், நண்பர்கள் பலர்விட்டிற்கும் இப்படம் 100 நாட்களுக்குமேல் ஓடும் படத்தைப்பார்த்த பெண்ணைப் பெற்ற பெற்றோர் சும்மாவா இருப்பார்கள், முன்னர் காவாலி, மொக்கன், 8 பெட்டையளுக்கு கடிதம் எழுதியவன் என்று கூறிய பையனின் வரைவிலக்கணம் எல்லாம் மறைத்து ஏலம் போடுவார்கள்.

என்ரை அவர்... ஈரானிலை இதைவிட காதல்வசனம் வேறு என்ன வேண்டும். நான் அறியக்கூடியதாக இங்குள்ள நண்பர்கள் சிலருக்கு 2, 3, பெண்களின்கடிதம்கிடைத்தது நண்பர் சொன்னர். தற்சமயம் தான் ஒருமுறை பார்த்து சிரித்ததுகாணும், ஆளை வடிவாகத் தெரியாதென்று. எப்படி விலாசம் அவர்களுக்கு கிடைத்ததோ தெரியாதென்று. இங்கு வேலைபார்த்துக்கொண்டு இப்படிச் சம்பளத்தில் வேலைசெய்தால் சீதனம் அதிகம் கிடையாதென்று வேலையை விட்டவர்களும் பலருண்டு.

●

என்ரை அவர் ஈரானிலை... அவர் முந்தி சிகரெட் குடிக்கிறேல்லை, குடிவகை ஒன்றும் பாவிப்பதில்லை. இப்ப டன்கில் (Dun Hill) தானும் குடிக்கிறவராம். குளிருக்கும் கடும் யோசனைக்கும் டன் கில்தானும் சமாளிக்கிது (இது விளம்பரமல்ல). நீர் உதைச் சொல்லுறீர். முந்தி இஞ்சஇருக்கேக்க ஜின்ஜர் பியரே குடிக்க மாட்டார்? இப்ப குளிருக்காண்டி, விஸ்கிதானும் குடிக்கிறவர்.

## ஒரு இலங்கையனின் பாடல்

**புதுவை இரத்தினதுரை**

மாவலி மெல்ல நடந்து சிரித்திடும்
மாருதம் சாமரை வீசித் திரிந்திடும்
தாவிடும் மானினம் காவினிற் துள்ளிடும்
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

மட்டுநகர் மணி வாவியில் மீனினம்
மங்கு நிலவினிற் பாடிக் களித்திடும்
கொட்டு பனிமலர் மொட்டு விரித்திடும்
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

நொச்சிகா மத்திலே கொச்சி விளைந்திடும்
நுாறுமலைகளில் ஆறு தவழ்ந்திடும்
உச்சிமலைகளில் பச்சைப் பயிர் வளர்
ஈசிமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

முத்துவிளைந்திடும் புத்தளம்; வத்தளை
மூலை முடுக்குகள் எங்கணும் புற்றரை
இத்தனை செல்வமும் முத்திரை குத்திடும்
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

பாதை மறைத்திடும் வாழை கரும்பதும்
பாலைச் சொரிந்திடும் பட்டிக் கறவையும்
நாதமெழுந்திட வேதம் படித்திடும்
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

சோகுப் பறவைகள் கூடிக் களித்திடும்
தோகை மயிலினம் ஆடி நடித்திடும்
வாடிக் குடில்களில் பாடல் எழுந்திடும்
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே
ஈழமணித் திரு நாடெங்கள் நாடே

ஆவிகளுடன் பேசும் முறைபற்றி அடுத்த கட்டுரையில் விளக்கப் படும்.

## ஆவியுலகத் தொடர்பு—21

# விஞ்ஞானிகள் பதிவுசெய்துள்ள ஆவிகளின் குரல்கள்

வி. ரவிச்சந்திரன்

ஆவிகள் உண்டா இல்லையா? என்ற இக்கேள்வி இப்போது விஞ்ஞானிகளையும் கவர்ந்து இழுக்க ஆரம்பித்துள்ளது. ஆவிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள் இப்போது அவைகளின் பேச்சுக்களை எலெக்ரோனிக் முறைகளில் பதிவுசெய்யமுயல்கின்றனர். அதில் சில விஞ்ஞானிகள் வெற்றியடைந்தும் உள்ளனர். அவர்களுள் தலைசிறந்து விளங்குபவர் ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் கான்ஸ்டன்டின் ராதீவ் என்பவர். இவர் விஞ்ஞானி மட்டுமல்ல சிறந்த எழுத்தாளருங்கூட.

### அதிசய வெற்றி

இவர் நான்கு முறைகளைக் கையாண்டு 72,000 ஆவிகளின் குரல்களைப் பதிவுசெய்துள்ளார். ஆம், இது ஒரு நம்ப முடியாத அதிசய வெற்றியாகும். இதில் 25,000 குரல்கள் உறவினர்களால் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 64 ஆண்டுகளுக்கு முன்பு பால்டிக் குடியரசைச் சேர்ந்த லட்வியா என்ற நாட்டில் பிறந்த இவர் சுமார் 25 ஆண்டுகாலம் இத்துறையில் அயராது உழைத்தார். இவர் பதிவுசெய்துள்ள குரல்களை மனோதத்துவ நிபுணர்களும், விஞ்ஞானிகளும் பரிசோதனை செய்து அவை ஆவிகளின் குரல்கள்தான் என்று ஒப்புக்கொண்டார்கள். (அந்தக் குரல்களை ஓர் இசைத்தட்டில் பதிவு செய்து லண்டனில் விற்பனை செய்கிறார்கள்).

திரு. ராதீவுக்கு இத்துறையில் எப்படி ஆர்வம் பிறந்தது? இவருக்குமுன் இதில் ஆராய்ச்சி செய்த டாக்டர் பிரடரிக் ஜெர்ஜன்ஸன் எழுதிய 'ஆகாயத்திலிருந்து குரல்கள்' என்ற புத்தகத்தைப் படித்ததில் இருந்து அவரைச் சந்திக்க விரும்பினார் டாக்டர் ராதீவ்.

டாக்டர் ஜெர்ஜன்ஸன் ஒரு கோடைகாலத்தில் தன்னுடைய தோட்டத்தில் நுண்ணிய மைக்ரோபோன் மூலமாக பறவைகளின் ஒலியைப் பதிவுசெய்தார். பிறகு அதைப் போட்டுக் கேட்டபோது இறந்துபோன தன் உறவினர்களின் குரல்கள், சிலவும் அதில் ஒலிக்கக்கேட்டுத் திகைத்தார். பிறகு அவர் ஒலிப்பதிவு முறையில் சில மாறுதல்களைச்செய்து மேலும் குரல்களைப் பதிவுசெய்தார். டாக்டர் ஜெர்ஜன்ஸனைச் சந்தித்தபோது அவர் ராதீவ் எதிரில் ஒலிப்பதிவைச் செய்துகாட்டினார்.

பிறகு டாக்டர் ராதீவ் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சியில் இறங்கினார். ஆனால் பல நாட்கள் டேப் இயங்கிய ஒலியும் சலிப்பான இவரது குரலும் தான் பதிவாகி இருந்தன. பல நாட்கள் விடாமுயற்சியுடன் தொடர்ந்த இவருக்கு ஒரு நாள் 'Oh yes' என்ற ஒலி மட்டும் கிடைத்தது. பிறகு சிறிது சிறிதாக குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. ஒரு முறை ஒரு பெண்ணின் குரல் மெதுவாக ஜெர்மன் மொழியில் ( Kent hr Margaret] Konstantin? (மார்க்கரெட்டை அறிவாயா கான்ஸ்டன்டின்) என்று கேட்டது. பிறகு அதே குரல் பாகும் தொனியில் Vi talu Runa! (நாங்கள் வெகு தூரத்தில் இருக்கிறோம்) என்று லட்வியன் மொழியில் அறிவித்தது. உடனே ஓர் ஆண் குரல் இடையில் புகுந்து Va a dormir; Margaret (தூங்குவதற்குப் போ மார்க்கரெட்) என்று பிரெஞ்சு மொழியில் கட்டளையிட்டது.

இந்த ஒலிகள் டாக்டர் கான்ஸ்டன்டின் ராதீவுக்கு நம்பிக்கையளித்தன. காரணம் மார்க்கரெட் என்ற பெண்ணின் மரணத்தினால் அவர் அப்போது பாதிக்கப்பட்டிருந்தார். பின்னர் இவருடன் பீற்றர் பண்டர் என்பவரும் சேர்ந்தார். இருவரும் சேர்ந்து ஆவிகளின் குரல்களைப் பதிவு செய்தனர். ஆவிகளின் குரல்களை A,B,C, B+, B-, C+ என்று பல்விதமாகத் தரம்பிரித்துள்ளார் டாக்டர் ராதீவ். ஆவிகளின் பேச்சு அதிவிரைவாகவும் சுருக்கப்பட்டதாயும் அதாவது தந்தி வாசகங்களைப்போல இருப்பதாக இவர் கூறுகிறார். 10 வார்த்தைகளைக்கொண்ட வாக்கியமே மிக நீளமானது என்று கூறவேண்டும்.

நம் வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு. தீர்வுகளையும் எதிர்காலம்பற்றியும் ஆவிகள் எடுத்துரைக்கின்றனவாம். 1970-ம் ஆண்டில் இந்த விஞ்ஞானி மதுரை ஆதீனத்திற்கு எழுதிய ஒரு பதில் எனக்கு இதுவரை இந்தியாவிலிருந்து கடிதமே வந்ததில்லை. ஆனால் உங்கள் கடிதம் வருமென்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டதென்று குறிப்பிடுகிறார். ஆனால் அதே சமயம் சில கேள்விகளுக்கு நாங்கள் பதில்கூற அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறிவிடுகிறார்களாம், ஆவி உலக வாசிகள். இதைக் கூறும் இந்த ஞானி, அவர்களுக்கு அனுமதி அளிப்பது யார் என்பதையும் தெரிந்துகொள்ள முடிய


[7ம் பக்கம் பார்க்க]

AUTOMOTIVE GROUP

எங்கள் தயாரிப்புகளும் சே
ஒன்றிணைந்து உங்கள் வாகன
அதிக நாட்கள் இயங்க உதவ

LION

லயன் ஸ்பிரிங் பிளேட்ஸ்
ஸ்திரமாக இயங்குபவை,



உற்பத்தியாளர்கள் :
பாட்கோ மோட்டார் உதிரிப்பாகங்கள்
சிலோன் ஆட்டோமோட்டிவ் புறடக்ட்ஸ்

ஆட்டோ மோட்டிவ் நிறுவனத்தினதும், பாட்கோ மற்றும் லயன். ஆகியவற்றின் தயாரிப்புகள் உயர்தரத்திற்கேற்ப நீடித்துழைக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படுவதால், பலநாட்கள் உபயோகிக்கலாம். அதோடு எவ்வளவு தூரத்லிருந்தாலும் உங்களுக்குக் கிட்டும் வகையில் பல வியாபாரிகள் மூலம் வினியோகிக்கப்படுவதால், நீங்கள் எங்கு சென்றாலும் ஆட்டோ மோட்டிவ் தயாரிப்புகளுடன் செல்லுங்கள். அவை உங்கள் வாகனங்களை அதிக நாட்கள் இயங்கச் செய்கின்றன.

வினியோகஸ்தர்கள் :
ஆட்டோமோட்டிவ் புறடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
217 பஞ்சிகாவத்தை றோட், கொழும்பு 10
தொலைபேசி : 35791

பாட்கோ
நீடித்து



உற்பத்தி

நாடக விமர்சனம்

# 'புதியதொரு வீடு'

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவ-மாணவியரின் செயற்திட்ட நாடக அரங்கேற்றம்- புதியதொரு வீடு.

மீனவர் வாழ்க்கையை, அதுவும் ஒரு குடும்பத்தின் கதையைச் சொன்னார்கள்.

கடலுக்குச்சென்று ஓராண்டுகளாகக் கணவன் வீடு திரும்பவில்லை. அவன் நினைவாகவே இருந்தமனைவி – சந்தர்ப்ப சூழ்நிலையால், ஊராரின் ஆவலாதி அவதூறலினால், ஊர்ப்பெரியோரின் ஆலோசனைப்படி கணவனின் தம்பியை மணந்து கொண்டாள். அண்ணனுக்கு ஓர் ஆண்குழந்தை கொடுத்தவள், தம்பிக்கும் ஒரு குழந்தை கொடுத்தாள். இக்கட்டத்தில் 'செத்தவன்' என்றிருந்தவன் வீடு வருகின்றான். எல்லோரும் திகைக்கின்றனர்.

பெரியோரின் 'ஆலோசனை'-அண்ணன் மடத்துக்குச்சென்று பொதுவாழ்வில் ஈடுபடுவது.

"'கடலில் தொழில் உண்டு கரையில் துறை உண்டு.'"

வாழ்க்கையில் அவனுக்கு இன்னுமொரு பிடிப்புண்டு. தான் பெற்றவனுடன் ''உலகமெல்லாம் தன்னுடையதல்ல'' என்ற உணர்வுடன், புதிய சூழலால், நெருக்கடியால்கூடி வாழ முடியாவிட்டால் பிரிந்துதான் வாழவேண்டும் என்ற உறுதியுடன், தனக்குச் சொந்தமானதை மட்டும் எடுத்துச் சென்றுவிடுகிறான்.

முடிவும்சிந்திக்கவைக்கிறது. மகாகவியின் நாடகம் 'கவிதை'யில் என்று சொல்வதைவிட 'உரைநடைக் கவிதை'யில் என்று சொல்வது பொருத்தமுடையது.

'கடவுள் பிழைவிட்டால் மனிதர்கள் திருத்துவார்கள்' -போன்ற வசனங்கள் பொருளற்றவை மட்டுமல்ல, இடப்பொருத்தமற்றவையும். படைத்தவனை எடைபோடுவனவுமாகும்.

மாணவ-மாணவியர் அனைவருமே சிறப்பாக நடித்தனர் ஒரு சிலரை விலக்கியிருக்கலாம். ஆனால் செயற்திட்டமென்பதால் அனைவரும் கொண்டுவிட்டனர் போலும்.

தமிழ் நாடகக் கலை ஈழத்தில் வளருகின்றது என்பதற்கு மீண்டும் ஓர் உதாரணம்- "புதியதொரு வீடு.'

இந்த நாடகப் பாணி-நாட்டிய நாடக முறையும், ஆங்கில மேடை "ஒப்பெரு'(Opera) முறையும், சாதாரண சமூக நாடக முறையும்கலந்தவொரு புதுமுறை நாடகம். இயக்குநர் திரு. பி. ஏ. சி. ஆனந்தராஜா பாராட்டுக்குரியவர்.

தமிழ் ஈழத்தில் திறமைகள் உண்டு அவை வெளிவர வேண்டும்.

நாடகத்தி பலல் புதிய உத்திகள் கையாளப்பட்டன. அத்தனையும் வரவேற்கப்படவேண்டியவை.

Mime முறையை (அபிநயப் பாணி - நாட்டிய நாடகப் பாணி) முழுமையாகவே கையாண்டிருக்கலாம். குறிப்பாகத் திருமண வைபவத்தில் பொருட்களை வெளிப்படையாகப் பயன்படுத்தாமல் விட்டிருக்கலாம். (மாலை, தோரணங்கள்...)

தொடக்கத்தில் பாட்டுகள் நீண்டு பொருளற்றுத் தொய்வுற்றது.

நாட்டுக்கூத்து ராகம் ஒன்று ஊடுருவிவந்து குழப்பியது.

விறுவிறுப்புக் குறைந்து, நாடகத்தை நத்தை போன்று நழுவ வைத்தது.

உரைநடைக் கவிதை உரையாடலில் உயிர்பெறத் தவறிவிட்டது. இத்துறையில் கூடிய கவனம் செலுத்தியிருந்தால் நாடகம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கும்.

பொதுவாக முகபாவங்களில் உயிரோட்டமும் உணர்ச்சிகளும் பிரதிபலிக்கப்படவில்லை. பாடமாக்கியதை ஒப்புவிக்கும் போக்கு முகத்தில் காணப்பட்டது.

நாடகத்தில் இருந்த புதுமையும், சிறப்பும், கவர்ச்சியும், (7-ம் பக்கம் பார்க்க)

# வெள்ளிவிழாக் காணும் மிருதங்கக் கலைஞர்

தமிழ்நாடு — சிதம்பரம் அண்ணாமலை நகரைச் சேர்ந்தவரும், கடந்த 30 ஆண்டுகளாக ஈழத்திருநாட்டில் மிருதங்க கலை வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், யாழ் வளாக நுண்கலைக் கல்லூரியின் தற்போதைய மிருதங்க விரிவுரையாளருமாகிய சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதன் வெள்ளிவிழாக் காணுகின்றார். எந்த ஒரு துறையிலும் குறிப்பாக இசைத்துறையில் வெள்ளி விழாக் காண்பதென்பது சுலபமான காரியமல்ல அதிலும் தங்கென ஒரு



பாணியை அமைத்து அதன்படி ஒழுகி, மற்றையோருக்கும் அதனைக் கற்பித்து மிருதங்கக் கலையை கடந்த 30 ஆண்டுகளாக வளர்த்து வருபவர் திரு. ஏ. எஸ். என்றால் அது மிகையாகாது ஈழத்து 'லய ஞான மேதை' திரு. ஏ. எஸ். இராமநாதனுக்கு அவருடைய சேவையைப் பாராட்டி அன்னாரின் மாணவர்களும், இசை அபிமானிகளும், இசை விற்பன்னர்களும் மற்றும் தோழர்களும் சேர்ந்து 12-3-78 [அதாவது இன்று) ஞாயிற்றுக் கிழமை பி. ப. 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கலாஞ்சலி நிகழ்ச்சியை ஒழுங்குசெய்துள்ளதில்

ளர். அன்னாரின் திறமையினாலும், அயராத கடின உழைப்பினாலும் பல சிறந்த வித்துவான்கள் ஈழத்தில் உருவாகி வந்தனர். அவர்களுள் திரு. வி. அம்பலவாணர், திரு. சி. பாக்கியநாதன், பி. சின்னராசா, ஆர் பிரகலாதன், எம் ரவிச்சந்திரன் ஆகியோரையும், திருவாளர்கள் என். மகேந்திரன், எம். சிதம்பரநாதன், எஸ். பிரணவநாதன் போன்றோரையும் இங்கு குறிப்பிடலாம். இவர்கள் அனைவரும் இலங்கை வானொலிக் கலைஞர்களாகவும் இருக்கின்றனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது, திரு. ஆர் பிரகலாதன் என்ற மாணவர் இந்திய ரேடியோ நடத்திய மிருதங்கப் போட்டியில், இந்திய மாணவர்களுக்கு, இலங்கை மிருதங்க மாணவர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக்காட்டும் வகையில், இந்திய ஜனாதிபதியின் பதக்கத்தைச் சுவீகரித்துக்கொண்டார். இது திரு. ஏ. எஸ். இராமநாதனின் திறமை, ஞானம் என்பவற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அகில இந்திய மாணவர்களைப் பின்னே தள்ளி, ஒரு வெளிநாட்டு (இலங்கை) மாணவன் ஜனாதிபதி பரிசு பெறுவதென்பது நினைத்துப் பார்க்கவியலாத ஒரு காரியமாகும். இவ்வாறு பல மிருதங்க மாணவர்களை உருவாக்கிய திரு. இராமநாதனிடம் இன்னும் பல மாணவர்கள் ஆர்வத்துடன் மிருதங்கக் கலையைப் பயின்றுவருகின்றார்கள், அவரின் பழைய மாணவர்கள் இன்று ஈழத்தில் பல இளம் கலைஞர்களை உருவாக்கி வருகின்றார்கள்.

"முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்' என்னும் முதுமொழிக்கிணங்க கடின உழைப்பால் உயர்ந்த திரு. ஏ. எஸ். அவர்கள் இன்று வட இலங்கை சங்கீத சபை

சி. விவேகானந்தன்

புதுமை எதுவுமில்லை. எனவே இன்றைய தினத்தில் அன்னாரை நினைவுகூர்வது சாலச் சிறப்புடையது.

தென் இந்தியாவில், தமிழ் நாட்டில் அண்ணாமலை நகரில் பிறந்த சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதன் அவர்கள் இயற்கையிலேயே சங்கீத ஞானம் நிரம்பப்பெற்றவர். ஆரம்பத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வாய்ப்பாட்டுக் கற்றுக்கொள்ளச் சென்ற அவரை அங்குள்ள மிருதங்க இசைத்துறைப் பேராசிரியர் கண்ணுற்றார். பையனாக இருந்த அவரின் லய ஞானத்தை அறிந்த பேராசிரியர் அவர்கள் 'பையா நீ மிருதங்கம் கற்றுக்கொண்டாயானால் உனக்கு நிச்சயமாக ஒளிமயமான எதிர்காலம் உண்டு' என்று கூறி மிருதங்கத்துறையில் சேர்த்துவிட்டார். இவ்வாறு பேராசிரியர் உருவில் விதி சதிசெய்திராவிடில் இன்று ஈழத்தில் மிருதங்கக்கலை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்குமா என்பது கேள்விக்குறியாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம்பட்டம் பெற்று வெளியேறிய திரு. ஏ. எஸ். இராமநாதன் இந்தியாவில் பல இசைக்கச்சேரிகள் செய்து அதன் பல்வகைப்பட்ட நுணுக்கங்களை அறிந்துகொண்டவராக விளங்கினார். பல இசைஅபிமானிகளின் வேண்டுதலுக்கிணங்க அவர் இலங்கையில் மிருதங்கக் கலை வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்க விரும்பி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துசேர்ந்தார்

இலங்கையில் குறிப்பாக வட மாகாணத்தில் உள்ள பலர் அந்நாளில் அவரிடம் மிருதங்கக்கலையைப் பயின்ற

மிருதங்கப்பகுதிக்கு ஆலோசகராகவும், பிரதம பரிசோதகராகவும், யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத் தலைவராகவும் இருந்து வருகிறார். இலங்கை பல்கலைக் கழக யாழ் வளாக நுண்கலைப் பிரிவிற்கு மிருதங்க விரிவுரையாளராக கடந்த அரசாங்கம் ''இராமநாதன் அகடமி''ஐப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கடமையாற்றிவருகிறார். மிருதங்க வகுப்பு நேரத்தில் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக சிறு போட்டிகள்வைத்து பரிசில்களை வழங்குவார். மிகவும் நகைச்சுவையாகப் பேசுவதில் வல்ல திரு. ஏ. எஸ். அவர்களின் பாட நேரம் இனிக்கும் என்று கூறாத மாணவன் இருக்க முடியாது. அதே நேரத்தில் பாடவிடயங்களில் மிகவும் கண்டிப்பானவர். எனவே எப்பொழுது திரு. ஏ. எஸ். இடம் மிருதங்கவகுப்புக்குப் போவோம்என்று அவரின் மாணவர்கள் அங்கலாய்ப்பதில் ஆச்சரியமேதுமில்லை. கடவாத்தியத்தினையும் மிருதங்கத்துடன் கற்பித்துவரும் இராமநாதன் அவர்கள் ஒரு கலைஞனின் குணங்களான கடவுட்பக்தி, ஞானம், லயம், புத்திக்கூர்மை, அடக்கம் போன்ற பல சிறந்தகுணங்களை உடையவர். விடியற்காலையில் 3 மணிக்கெல்லாம் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு மிருதங்கம் வாசிக்கத் தொடங்கினாரென்றால் காலை 6 அல்லது 6-30 மணிவரை தேகம் வியர்க்க ஒரே சாதனைதான். அன்னாரின் சுத்தமான கைப் பேச்சுக்கு இது ஒருமுக்கிய காரணமென திட்டவட்டமாகக் குறிப்பிடலாம்.


திரு. ஏ. எஸ். இன் குடும்

[7-ம் பக்கம் பார்க்க]


சேவையும்
கனங்களை
தவுகின்றன

partco

பாட்கோ மோட்டார் உதிரிப்பாகங்கள்
நீடித்துழைக்க தயாரிக்கப்படுபவை.



உற்பத்தியாளர்கள் :
லையன் ஸ்பிறிங் பிளேட்ஸ்
ஆட்டோ மோட்டிவ் ஸ்பிறிங்ஸ் லிமிட்டெட்

## அதிசயம்! ஆனால் உண்மை

### மணலில் எழுந்த நூல்

தமிழில் உருவாகிய நூல்களில் நன்னெறி நூல் முதன்மையானது. இந்நூலில் உள்ள 40 பாடல்களையும் நூலாசிரியர் சிவப்பிரகாசர் கடற்கரையில் அமர்ந்திருந்து மணலில் எழுதி மனனம் செய்தாராம். பின்னரே இது காகிதப்போக்கில் வடிவானது.

### பச்சைமிளகாய் தின்பவர்

ஒமேனியர் பச்சைமிளகாயை கடித்துத்தின்பார்கள். மீன்களை அவித்து இந்தப் பச்சைமிளகாயை பச்சையாக கடித்துத் தின்பதில் விருப்பமுடையவர்கள். ருமேனிய திரைப்படங்களில் அக்காட்சியைப் பெரும்பாலும் பார்க்கலாம்.

### ஆண்கள் மது அருந்தினால்

மகாராஷ்டிரத்தில் பூரண மதுவிலக்குண்டு. தப்பித்தவறி ஆண்கள் மது அருந்துவதைக் கண்டால் பெண்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று மது விற்கும் இடங்களில் கலாட்டா செய்து அங்கு சேதம் விளைவிப்பார்கள்.

### புகைப்பதனால்...

புகைப்பிடிக்கும் பழக்கத்தால் நெற்றியில் சுருக்கம் உண்டாகும். நிகோட்டின் என்னும் நச்சுப்பொருள் இரத்தக் குழாய்களைச் சுருங்க வைத்து விடுகின்றன. அறிவு முதிர்ச்சியால் இப்படி நெற்றி சுருங்குவது பெரும்பாலும் இல்லை.

### கோப்பியில் நஞ்சா?

மதுபானங்களை விட கோப்பியில் நஞ்சு உள்ளதாம்; கோப்பியிலுள்ள 'காஃபின்' என்னும் நச்சுப்பொருள் வயிற்றுக் குழாய்களைச் சுருக்குகின்றது. இப்படி வயிற்றில் சுருக்கங்கள் உண்டாகும் போது ஒரு கிளாஸ் நீர் அருந்தவேண்டும்.

### நிலத்துக்கடியில் வீடு

சுவீடன் நாட்டிலுள்ள மக்களில் 30 வீதமானோர் நிலத்துக்கடியில் வாழ்கிறார்கள். அங்கு சகல சௌகரியங்களுடனும் இவர்கள் வாழ்கிறார்கள். ஜப்பான் நாட்டவர் தான் நிலத்துக்கடியில் வாழ முதலில் ஆராய்ச்சி செய்தார்கள்!

### கிழமைகளில் குழந்தை

கொலராடோவில் ஒரு பெண்மணிக்கு ஏழு குழந்தைகள். இக்குழந்தைகளுக்கு வயலெஷ் பீச் என்பவர் தாயாவார். இக்குழந்தைகள், வாரத்தில் 7 நாட்களும் பிறந்ததால் அவற்றுக்கு திங்கள், செவ்வாய்... வரிசைக்கிரமத்தில் பெயரிட்டுள்ளார்.

### கட்டாக்காலி நாய்கள்

நியூயோர்க் மாநிலத்தில் கட்டாக்காலி நாய்களைச் சுடுவதில்லை. ஒரு வகை மாத்திரைகளை வீதியில் போடுவதால் அவற்றை விருப்புடன் கட்டாக்காலி நாய்கள் தின்று இறந்துவிடுகின்றன.

### லதாவின் சாதனை

எந்தவொரு பின்னணிப் பாடகரும் செய்யமுடியாத சாதனையை லதா மங்கேஷ்கர் செய்துள்ளார். இதுவரை 25,000 பாடல்களைப் பாடியுள்ளார்.

தொகுத்தவர்: சக்தி

---

அண்மையில் தமிழக சட்டமன்றக் கூட்டத்தில் எம். ஜி. ஆர். ஓர் எதிர்பாராத அறிவிப்பை வெளியிட்டு அனைவரையும் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தினார். முதலமைச்சரான பிறகு சினிமாத்துறையில் இருந்து ஒதுங்கி இருந்த எம். ஜி. ஆர். மீண்டும் நடிக்கத் தயார் என்று அறிவித்ததே ஆச்சரியத்திற்குக் காரணம். அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடையக் காரணம் தமிழக அரசின் தலைவராக இருக்கும் ஒரு முதலமைச்சர் சினிமாவில் நடிக்கலாமா என்பதுதான். எம். ஜி. ஆர். நடிப்பதாவது இதெல்லாம் பொய்யான செய்திகள் என்றும் சிலர் கருதினார்கள். ஆனால் பெப்ரவரி-12ம் திகதி சென்னை மெரினாவில் நடந்த பொதுக்கூட்டத்தில் எம். ஜி. ஆர். இன்னும் 3 மாதத்தில் நடிக்க ஆரம்பித்துவிடுவேன் என்று மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடிகர்களுக்கு அரசியல் ஞானம் இருக்கிறதோ இல்லையோ, பொதுமக்கள் கண்ணை மூடிக்கொண்டு அவர்களை ஆதரித்தனர். அந்த நடிகர்களுள் அதிக செல்வாக்குப் பெற்று முதலமைச்சர் ஆசனம் வரை உயர்ந்துள்ளவர் எம். ஜி. ஆர். எனவே அவரது நடவடிக்கைகள், அறிக்கைகள் அனைவராலும் கவனிக்கப்படுகின்றன.

தமிழகத்தின் முதலமைச்சராக விருந்த மற்றவர்களுக்கும் எம். ஜி. ஆருக்கும் ஒரு பெருத்த வேற்றுமை உண்டு. முந்தைய தமிழக முதலமைச்சர்களான ஆந்திரகேசரி பிரகாசம், ராஜாஜி, குமாரசாமி ராஜா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், காமராஜ், அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகிய அனைவருமே அரசியலை முழு நேரமாகவும் அவர்களது தொழிலைப் பகுதிநேரமாகவும் கொண்டிருந்தனர். ஆனால் எம். ஜி. ஆரோ அவரது நடிப்புத்தொழிலை முழுநேரமாகவும் அரசியலைப் பகுதிநேரமாகவும் கொண்டிருந்தார். மற்றவர்கள் முதலமைச்சரானதும் தொழிலைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் எம். ஜி. ஆரால் முதலமைச்சரான பிறகும் தொழிலைப் பற்றிக்கவலைப்படாமல் இருக்கமுடியவில்லை.

## எம். ஜி. ஆர். ஏன் நடிக்கவேண்டும்?

**வி. ரவிச்சந்திரன்**

முன்பு முதலமைச்சராக இருந்தவர்கள் வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், விவசாயிகள். அவர்கள் எத்தனை ஆண்டுகாலம் வேண்டுமானாலும் தொழிலில் நேரடியாக ஈடுபடாமல் இருக்கலாம். முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னும் மீண்டும் முன்போல் அவர்களது தொழிலைக் கவனிக்கலாம். தொழிலும் பாதிக்கப்படாது. அவர்களும் பாதிக்கப்படமாட்டார்கள்.

ஆனால் எம். ஜி. ஆருடைய நிலைமை என்ன? நடிப்புத் தொழிலில் நேரிடையாக ஈடுபடாமல் அரசியலைக் கவனித்தாரானால் சில ஆண்டுகள் கழித்து மீண்டும் முன்போல் தொழில் இருக்காது. மக்களின் உணர்வோடும் உணர்ச்சியோடும் நேரிடையாகத் தொடர்பு கொண்ட தொழில் நடிப்பு. இடைப்பட்ட காலத்தில் மக்களின் உணர்வும் உணர்ச்சியும் மாறிவிட்டால் எம். ஜி. ஆர். பாதிக்கப்படுவார். எனவே தான் முதலமைச்சர் பதவி கிடைத்துவிட்டதே என்பதற்காக தொழிலைப் புறக்கணிக்காமல் நடித்துமுடித்துத்தர வேண்டிய படங்களை எல்லாம் இரவு பகலாக உழைத்து முடித்துக் கொடுத்துவிட்டு எம். ஜி. ஆர். பதவி ஏற்றார்.

ஒரு நாள் கூத்துக்குமீசையை எடுக்கலாமா? என்பதுபோல சில ஆண்டுகாலப் பதவிக்காகத் தனக்கு வாழ்வளித்த தொழிலைக் கைவிட எம். ஜி. ஆர். தயாராக இல்லை.

ஒரு முதலமைச்சர் சினிமாவில் நடிக்கலாமா? நக்கையா என்ற ஒரு ஆந்திர நடிகர் இருந்தார் இவரை ஆந்திர எம். ஜி. ஆர். என்றழைப்பார்கள். இவர் பாராளுமன்ற அங்கத்தினராக இருந்தார். சினிமாவில் நடித்துக்கொண்டிருந்தார்.

எஸ். எஸ். ராஜேந்திரனை தமிழ் ரசிகர்கள் அதற்குள் மறந்திருக்கமாட்டார்கள். இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபடியே படங்களில் நடித்தார்.

எம். ஜி. ஆர். கூட சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருக்கும்போதும் நடித்துக் கொண்டிருந்தார். தமிழக அரசின் சிறு சேமிப்பு இயக்குநராகப் பதவி வகித்தபோதும் நடித்தார். ஆனால் இப்போது அவர் ஒரு முதலமைச்சர் அல்லவா?

முதலமைச்சர் சினிமாவில் நடிப்பதில் தவறு என்ன? இந்திய அரசியல் சட்டம் அதற்கு இடம்தரவில்லையா?

ஒரு முதலமைச்சர் சினிமாவில் நடிப்பதற்கு சட்டம் தடையாக இல்லை. சினிமாவில் நடிப்பதன்மூலம் ஊதியம் பெறக்கூடாது என்றுதான் தடை உள்ளது. ஊதியம் பெறாமல் எம். ஜி. ஆர். நடிக்கலாம்.

ஆனால் பொதுவாக முதலமைச்சர் எவ்வித தொழிலும் செய்யக்கூடாது என்று ஒரு மரபு உள்ளது. அதாவது நடைமுறையில் உள்ள ஒரு பழக்கம் தான். ஆனால் பொதுநலன் கருதி இந்த மரபை மாற்ற வேண்டியது அவசியமாகிறது. அதாவது எம். ஜி. ஆர். நடிக்காததால் ஆயிரக்கணக்கான திரைப்படத் தயாரிப்புத்தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்த லட்சக்கணக்கானவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நற்போது தொழில் இல்லை.

எம். ஜி. ஆரின் புதிய படங்கள் வெளிவராததால் அவருடைய ரசிகர்களால் கிடைக்கும் வருமானம் வேற்றுமொழிப் படங்களுக்குப் போகும் வாய்ப்பு தற்போது அதிகரித்துள்ளது. கதாசிரியர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள், இசை அமைப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், துணை நடிகர்கள், நடிகைகள், நடிகர்கள், ஸ்டண்ட் நடிகர்கள், சண்டைப் பயிற்சியாளர்கள் முதல் சுவரில் படம் ஒட்டும் தொழிலாளர் வரை எண்ணற்றவர்களின் பிழைப்புக்காக எம். ஜி. ஆர். நடிக்கவேண்டியது அவசியமாகிவிட்டது. மற்ற நடிகர்கள் நடிக்கும் போது கிடைக்கும் வருமானத்தைவிட எம். ஜி. ஆரால் கிடைக்கும் வருமானம் அதிகம்.

எனவே எம். ஜி. ஆர் மீண்டும் சினிமாவில் நடிப்பது வரவேற்கத்தக்கதொன்று.

என்றாலும் அவருடைய பெயரும் புகழும் பாதிக்கப்படாதவகையில் முதலமைச்சர் நடிப்பது மிகுந்த எச்சரிக்கையுடன் ஆற்றப்படவேண்டிய செயல். இதில் அவர் வெற்றி பெறவேண்டும்.



யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் நடைபெற்ற இஸ்லாமிய இசை நிகழ்ச்சியில் ஈழத்தின் பிரபல பொப்பிசை பாடகரும், இந்திய வானொலியிலும் தம் குரலினிமையை வெளிப்படுத்தியவருமான "அலைகடல் மேலே" பாடல் புகழ் ரமேஷ் வைகுந்தவாசன் மெய்மறந்து பாடிக்கொண்டிருக்கிறார். பிரதம விருந்தினராக எம். இஷட். எம். மசூர் மௌலானா (ஹோட்டல் கூட்டுத்தாபனத் தலைவர்) கலந்துகொண்டார். திரு. ரமேஷுக்கு பாராட்டுப்பத்திரம், பாராட்டுரைகள், பாராட்டுப்பா, பரிசுகள் அளிக்கப்பட்டன. மாலைகள் அணிவித்து ரசிகர்கள் மகிழ்ந்தனர்.

அடுத்தபடத்தில் ரமேஷ், காரைநகர் சீநோர் நிறுவனத்தில் பொப்பிசை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். அதிகாரிகள் அவரைச் சூழவுள்ளனர்.

---

## வரப்பெற்றோம்

செவ்வந்தி
(மாத சஞ்சிகை)
ஆசிரியர்: மா. குலமணி

கைதாத்தம் புதிய அமைப்பில் வாசகர்களைக் கவரும்நிலையில் செவ்வந்தி சஞ்சிகை முன்னணியில் திகழ்கின்றது.

அட்டை, கலை, இலக்கியத் துறையில் மட்டுமல்ல; அரசியலிலும் தனது துணிச்சலான கருத்தை வெளியிட்டுவருவது பாராட்டப்படவேண்டியது.

'தமிழ்நாட்டு கல்லூரி வருகையால் இலங்கை சினிமாக்கலை பெருமையடைகிறது' என நடிகர் திலகத்தைப் பேசாசட்டி எழுதியிருப்பதுடன் இம்முறை அட்டையில் சிவாஜியின் ஒரு வர்ணப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.]

பரீட்சைக்கு உதவும் கட்டுரைகள் 'இலங்கையின் கிராமியப் பொருளாதாரம்' தமிழியல் வளர்ச்சியின் முன்னோடி' 'சர்வதேசச் சட்டம்' போன்ற கட்டுரைகள் ஆராய்ச்சி வளம் பொருந்தியதாக சிரமப்பட்டு எழுதியுள்ளார் கட்டுரையாளர்.

—அண்ணன்

---


## அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புழுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ்(50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே.

மேலதிக விபரங்கட்கு:

தரோரு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



**Rio** Daily 10-30, 4-45, 7-00&9-30 p.m.
Jaffna (Phone: 7607)
Grand Thrilling Release
JACK PALANCE in
Welcome To Blood City
(Color-Western-Scope)

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 & 9-45 p.m.
ROBERT SHAW
in
CUSTER OF THE WEST
(Color-Scope-Action)
From 15-3-78
SPANISH FLY (Color)

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்
புதிய ஜனாதிபதி அவர்களின் பதவியேற்பு வைபவ காட்சிகளும் காண்பிக்கப்படும்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

இன்று மட்டும்
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642;
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
K. பாலச்சந்தரின்...
அபூர்வ ராகங்கள் (புதிய பிரதி)
நாளை முதல்
சிவாஜி-பத்மினி பாலடை —புதிய பிரதி—

# வெள்ளி விழாக்காணும் ...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பமே ஒரு கலைக்குடும்பமாகும். அவருடைய ஐந்து பிள்ளைகளில் மூத்த புத்திரிக்கு மிருதங்கமும், அடுத்த புத்திரிக்கு வாய்ப்பாட்டும், மூத்த புதல்வனுக்கு வயலினும், இளைய புதல்வனுக்கு கடவாத்தியமும் நல்ல ஆசான்களைக்கொண்டும் தாமும் கற்பித்து வருகிறார். இவர்கள் சிறந்த வித்துவான்களாக எதிர்காலத்தில் திகழ்வார்கள் என்பது வெள்ளிடைமலை.

இன்று இவ்வளவு பெயருடனும் புகழுடனும் வாழும் திரு ஏ. எஸ்.இன் இளம் பராய வாழ்க்கை கஷ்டமாகவே இருந்தது. உதாரணமாக அவரின்கலையார்வத்திற்கு பெற்றோர் துணை செய்யவில்லை. அவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அவரின்பெற்றோர்கள் இரண்டு வருடங்களுக்குமேல் மிருதங்க வாத்தியமே வாங்கிக்கொடுக்கவில்லை. அவ்வளவு காலமும் திரு. ஏ. எஸ் இராமநாதன் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு சற்று தொலைவிலுள்ள மதத்தின் கீழேயுள்ள தூணில் அன்றைய பாடத்தை நாள் முழுக்கச் சாதனை செய்வார். இவ்வாறு இரண்டு வருடங்களுக்குமேல் மதகின் தூணின் துணையினால் மிருதங்கக்கலையை ஆரம்பத்தில் கற்று இன்று இவ்வளவு உயர்நிலைக்குச் சென்றால் அதன் இரகசியமாக விடாமுயற்சி, ஆர்வம், கலைப்பற்று முதலிய எண்ணற்ற காரணங்களைக் குறிப்பிடலாம்.

தற்போது உடுவில் 'லவ் லேனில்' வசித்துவரும் திரு ஏ. எஸ். அவர்களுக்கு அவரின் சேவையைப் பாராட்டி இன்று மாலை 6 மணிக்கு வெள்ளிவிழாக் கொண்டாட்டமும் பொற்கிழி வழங்கும் வைபவமும், கலைநிகழ்ச்சிகளும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வழக்கறிஞர் திருவாளர் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் கலாநிதி கைலாசநாதக்குருக்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார்.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
நினைத்ததை
முடிப்பவன்

வெல்லி
(வல்வெட்டித்துறை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

# புதியதொரு ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளும் — தலைப்பில் இல்லையே.

ஆறு மணித்தியாலங்களுக்குள் இருமுறை இப்படிப்பட்ட ஒரு நாடகத்தை—அதுவும் ஒலிவாங்கியின் உதவியில்லாமல் பெரிய மண்டபமொன்றில் மேடையேற்றியது நல்லதல்ல. மாணவ-மாணவியரின் திறமைக்கும் ஆற்றலுக்கும் மிதமிஞ்சிய சவால் அது!

என்ன விருப்பினும், இப்படியொரு சிறப்பான புதுமுறை நாடகத்தை கல்லூரி உயர்தர வகுப்பு மாணவ மாணவியரைக் கொண்டு மேடையேற்றிய இயக்குநர் திரு. பி. ஏ. சி. ஆனந்தராஜா அவர்களும், களப்பயிற்சி ஆலோசனை வழங்கிய திரு அ. தாசீசியஸ் அவர்களும்; இவர்களுக்கு உறுதுணையாக இருந்தோரும் பாராட்டுக்குரியவர்கள்.

பின்னணி இசையிலும், பாடல்களிலும் இன்னும் கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

அச்சிட்டுத்தந்த விளம்பரத் துண்டில் வாழ்த்துக்களைக் குறைத்து மேடையேறிய மாணவ-மாணவியரின் பெயர்ப்பட்டியலைத் தந்திருக்கலாம். அவர்களை ஊக்குவிப்பதுடன், பார்வையாளருக்குத் துணையாகவும் இருந்திருக்கும்.

மொத்தத்தில் 'புதியதொரு வீடு' ஈழத்துத் தமிழ் நாடக உலகில் புதியதொரு வீட்டைக் கட்டியெழுப்ப ஒரு முக்கிய படிக்கல்லாக அமையுமென்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை?

—கரையூர்ச்செல்வம்

# ஸ்ரீதாதா அப்தேஜி விரிவுரை

(யாழ்ப்பாணம்)

உலக இந்து மாமன்ற செயலதிபர் ஸ்ரீ எஸ். எஸ். தாதா அப்தேஜி இன்று மாலை 6-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்கமண்டபத்தில் 'வால்மீகி ராமாயணம்' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

# இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் மகோற்சவம் ஏழாம் திருவிழாவாகிய இன்று முருகப்பெருமான் பகல் மஞ்சத்தில் உள்வீதியிலும் இரவு மயில்வாகனத்தில் வெளிவீதியிலும் திருவுலாக் காட்சி தந்தருளுவதுடன் காலை 6-30க்கு வசந்தமண்டப பூஜையும், இரவு 7-45 முதல் பிரமஸ்ரீ எஸ் வி. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரத கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

# வான்விபத்தில் ஒருவர் பலி! 11பேருக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த மோட்டார் வான் விபத்தில் வான் கிளினர் பலியானார். வானில் வந்த 11 பேர் காயமடைந்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அராலியிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த வான் திடீரென பாதையை விட்டு விலகியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் அப்பாதையால் வந்த காரிலும், பஸ்ஸிலும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் இருவர் படுகாயமடைந்தனர். மற்றவர்கள் சிறுகாயமடைந்தனர்.

# ஆவியுலக..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று வருத்தம் தெரிவித்துள்ளார்.

துரதிர்ஷ்ட வசமாக 1974ம் ஆண்டு செப்டம்பர் 2 ம் தேதியன்று டாக்டர் கான்ஸ்டன்டின் ராதிவ் மரணமடைந்துவிட்டார். அவருடைய ஆராய்ச்சியை பீட்டர் பண்டர் என்பவரும் ராய்மண்ட் காஸ் என்பவரும் தனித்தனியாக நடத்தி வருகின்றனர். டாக்டர் ராதிவுடன் தொடர்பு கொண்டிருந்த நான், அவர் இறந்த பிறகு மேற்கண்ட இருவருடனும் தொடர்புகொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கிறேன். இக்கட்டுரை எழுதும் வரையிலும் இருவரிடமிருந்தும் எந்தப் பதிலும் வரவில்லை. முடிந்தால் அவர்களைப்பற்றிப் பிறகு எழுத முயற்சிக்கிறேன். ஆவியுலகத் தொடர்பு பற்றிய இந்தக்கட்டுரைத் தொடரின் கடைசிப்பகுதி அடுத்து வெளியாகிறது. பல வாசகர்கள் அறிய ஆவலோடு இருக்கும் ஆவிகளுடன் பேசும்முறைகளை அப்பகுதியில் காண்போம்.

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
காவியங்கள் உருவாக்கப்படலாம்! ஓவியங்கள் திருத்தப்படலாம்!
ஆனால் ... இவளோ!
என்றுமே திருத்த...உருவாக்க முடியாத
என்றுமே அழியாத உயிரோவியம்.
'ஜானகி சபதம்'
★ ரவிச்சந்திரன் ★ கே. ஆர். விஜயா ★ விஜயகுமார்
★ நிர்மலா ★ அசோகன் ★ தேங்காய்சீனிவாசன்
★ மனோரமா ★ பேபிரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
K. R. G. பிக்ஷர்ஸ்
ஜானகி சபதம்
கதை வசனம்: ஜெகதீசன் ஃ இசை: வி. குமார் ஃ தயாரிப்பு: ஸ்ரீமதிசாந்தா
ஃ டைரக்ஷன், அவினாசிமணி

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆண்டவன் கட்டளை

லிடோ (யாழ்.நகர்) போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர, நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
போன்: 7199.
யாழ்ப்பாணம்.
தந்தி: வைரம்

கடைசி மூன்று தினங்கள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா
நடித்த
சித்தி
(புதிய பிரதி)

### தமிழ்ப் பெண்ணின் தாலியை...

# "வரும் போது சும்மா வந்தீர்கள் அதே போல போங்கள்" என்றார் குண்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேன்; என்னால் எதுவும் செய்யமுடியவில்லை.

குண்டர்கள் என்பெட்டிகளைத் தாக்கிய பின் சிலிப்பரேட், சிலிப்பிங்காரில் கண் வைத்தார்கள். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. அவர்கள் மரக்கதவுகளை உடைத்து வர முயற்சித்தனர்.

**யூ. என். பி. அமைப்பாளர்**

"சிலிப்பரேட்டில்" யூ.என்.பி. அமைப்பாளர் புலேந்திரனும் வந்தார். குண்டர்கள் உள்ளே வந்ததும், குண்டர்கள் தலைவர் குலேந்திரனைக் கண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தார். புலேந்திரனும் மற்றும் அவருடன் வந்த சிலரும் இறங்கிச் சென்றனர்.

**ஒரு சிங்களவர் இறங்க மறுத்தார்**

அதன் பின் புகையிலுள்ள சிங்களவர்களை எல்லாம் இறங்கும்படி குண்டர்கள் கூறினார்கள். ஒரு சிங்களவர் இக்கொடுமைகளைத் தாங்கமுடியாமல் இறங்க மறுத்துவிட்டார்.

அப்பெட்டியிலிருந்த தமிழர்களைக் குண்டர்கள் தாக்க ஆரம்பித்தனர், எனக்கு முன்னால் இருந்தவருக்கு அடி நடந்தது.

'யாழ்ப்பாண தமிழர் எங்கள் பொலிசாரை அடித்தார்கள் என்று குண்டர்கள் கூறினார்கள்.

உடனே நான், தமிழர் பொலிசாருக்கு அடிக்கவில்லை, பொலிசார்தான் 2 தமிழரை சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்றேன், என்னை யாரென்று அவர்களுக்குத் தெரியாது. 'வாயைப் பொத்திக்கொண்டிரு என்று கூறி எனக்குஅடித்தார்கள். நீங்கள் 'மண் கொள்ளைக்காரர்கள்' என்றனர்.

உடனே குண்டர் தலைவர், மற்றவர்களைப் பார்த்து "எந்தப் பொருளையும் எவரும் தொடக்கூடாது" என்று கட்டளையிட்டான். எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக இறங்கினோம். நானும் இறங்கினேன். 2 அயல் நாட்டவரும் இருந்தனர்.

எல்லாப் பிரயாணிகளும் இறங்கியதும் குண்டர்கள் பெட்டிகளைத் தேடிப்பார்த்தனர், என் சூட்கேசையும் எடுத்துச்சென்றுவிட்டனர்,

திட்டமிட்டு குறித்த நேரத்தில் இத்தாக்குதல் நடந்தது, திடீரென ஏற்பட்ட ஆத்திரத்தில் நடக்கவில்லை,

**பத்துரூபாய் கொடுத்தார்**

ஒருகுண்டர் என்பேர்சை பிடுங்கி காசைப்பார்த்தார் 'எப்படி வீடுபோவதென்றேன் அவர் என்னை பார்த்துவிட்டு ஒரு பத்துரூபா நோட்டுடன் பேசைத்தந்தார்.

சுமார் 2மணிநேரமாக இத்தாக்குதல் நடந்தது. கலவரத்தின் முடிவில் குண்டர்கள் எந்த தமிழருக்கு இதற்கு அப்பால் செல்லமுடியாது என்றார். இறுதியாக, ஐக்கிய தேசியக்கட்சிக்கு "ஜே" என்று கோஷமிட்டுவிட்டு சென்றனர்.

அதன்பின் இராணுவத்தினர் வந்தனர் பின் ரயில் புறப்பட்டது. பெட்டியில் நாங்கள் 3பேரும், அனுராதபுரத்தில் ஏறியபிரயாணிகளும் இருந்தனர்.

குருநாகல் வரை சம்பவம் இல்லை. குருநாகலில் கலவரம் நடந்தது. மகோவிலும், குண்டர்கள் தமிழரை அடித்தனர்.

நான்பின் 1ம்வகுப்பு பெட்டிக்குள் சென்றுவிட்டேன் அங்கும் வந்து அடித்தனர்.

சிலிப்பரேட்டுக்கும் சிலிப்பிங்களுக்குமிடையில் உள்ள பாதையில், குண்டர் ஒரு பிரயாணியின் கழுத்தைப்பிடித்து நெரித்ததை கண்டேன், சின்னத்துரை என்பவர் வெளியில் ஓடினார் அவர் இறந்துவிட்டார் என பின்னர் அறிந்தேன். சிலிப்பிங்கார், மலகூடத்தில் நின்றவர்கள் தப்பினர். என் பெட்டியில், ஆயுதப் பொலிஸார் இல்லை. உள்ளே பொலிஸார் வரப்பார்த்தார்கள் ஒருநாகலில் பொலிஸார் நின்றனர்.

சிலிப்பிங்கால் 5 குண்டர்கள் ஏறியபயமுறுத்தினர். ஒரு பொலிஸார் வந்து போங்கடா வெளியே என்றதும் 5குண்டர்களும் இறங்கிச்சென்றுவிட்டனர்.

பொலிஸார் விரும்பியிருந்தால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டியிருக்கலாம். ஒரு பொலிஸ்காரரை தவிர மற்றஎந்த பொலிஸாரும் குண்டர்களை தொடக்கூடவில்லை.

குருநாகலில், பொலிஸார் தமிழரை பாதுகாக்க பெட்டியில் ஏறினர். ரயில் புறப்பட்டது. குண்டர்களும் ரயில் ஏறிக்கொண்டனர் பொலிஸார் அவர்களை தடுக்கவில்லை. குருநாகல் முதல் பொத்துகரசரை குண்டர்கள் தமிழர்களை துன்புறுத்திவந்தனர். பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர்.

**ஐரோப்பிய பெண்**

இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஐரோப்பியப்பெண் ஒருவர் இங்கு மனிதாபிமானம் உள்ள எவரும் இல்லையோ இந்த சேட்டையை நிறுத்த மாட்டார்களா என்றார்.

"நாங்கள் கொஞ்சப்பேர் அவர்கள் அதிகம்" என பொலிஸார் கூறினார்கள். உடனே அப்பெண் ஏன் துவக்கு வைத்திருக்கிறீர்கள் எறிந்து விடுங்கள் என்றார். இதன்பின் குண்டர்கள் சேட்டை நின்றது.

பொத்துசகரவில் யாழ்தேவி மாறியபோது தமிழர் துன்புறுத்தப்பட்டனர். அதன் பொல்காவலைவரை குழப்பம் இல்லை.

பல தமிழ் பிரயாணிகள் ரயில் டிக்கட்டை கூட இழந்துவிட்டனர்?

**ஏ.எஸ்.பி. லியனகே**

மருதானைக்கு ரயில்வந்ததும் ஒவ்வொரு பிரயாணிகளின் பெட்டிகளும் சோதனையிடப்பட்டது

கமிஷனர்: யாரால்? ஏ.எஸ்.பி.லியனகேயால்

கமிஷனர்: யார் லியனகே? எந்த லியனகே?

சட்டத்தரணி: சண்முகலிங்கம்! அநுராதபுரம் எஸ்.பி.லியனகேயல்ல. இவர் வேறு ஆள். அப்போது இன்ஸ்பெக்டர் லியனகேயாக இருந்தவர். இப்போ ஏ.எஸ்.பி. யாகிவிட்டார்

கமிஷனர்: பொலிஸாரும் வந்தனரா? ஆம் பொலிஸாரும் நின்று சோதனையிட்டு பல பொருட்களைமீட்ட பொலிசார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவிரும்பியிருந்தால் செய்திருக்கலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

ரயிலில் பொலிஸார் காக்கி கால் சட்டையுடன் இருந்தனர். பூனிப்போம் இல்லை

சட்டத்தரணி பாலா: குண்டர்களுக்கு உம்மை தமிழ் தலைவன் மகன் என்று தெரியாது

நான் பிரயாணத்தின் போது சிங்கள மக்களை அவதானித்தேன். வயதானவர்கள் தாக்குதலை தடுத்தனர் தமிழரை காப்பாற்றினர் அமைதியாக இருந்தனர். 15 அல்லது 20பேர்தான் கொள்ளையடித்தனர்.

குண்டர்கள் ஒருவர் நீங்கள் வரும்போது ஒன்றுமில்லாமல் வந்தீர்கள் அதேபோல போங்கள் என்றார்.

## குண்டர்கள் திரளுவதை...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கடுகண்ணாவ தபால் நிலைய தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஏதோ காரணத்திற்காக பழுதடைந்துவிட்டது. அதனால் பேராதனை, கண்டி பொலிஸ் நிலையத்திற்கு வானொலி தகவல் அனுப்ப எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

குருநாகல் நிலைமையை அறிந்து குருநாகல்பிஷப்தனது காரில் கண்டிக்குப் புறப்பட்டார். இராணுவ பொலிசாரின் உதவிக்குமுயற்சித்தார். பேராதனைபொலிசார் 2 கான்ஸ்டபிள்களை பாதுகாவலுக்கு அனுப்பியிருந்தார். இராணுவ ஏற்பாடும் செய்யப்பட்டது.

பௌத்த கோவில் கூடிய குண்டர்களுக்கு அங்கு 2 பொலிசார் நிற்பது தெரியாது.

5-30 மணிக்கு குண்டர்கள் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வந்தனர். கொள்ளையடித்த சாமான்களை எடுத்துச்செல்வதற்கு இராமப்பெண்கள் தொடர்ந்துவந்தனர்.

கான்ஸ்டபிள்களால் குண்டர்களை கட்டுப்படுத்தமுடியவில்லை. துவக்கைப் பாவிக்கத் தயங்கினர். இதேசமயம் குருநாகல் வேண்டுகோள்படி, அனுப்பப்பட்ட இராணுவத்தினர் பஸ்ஸில் அங்குவந்துசேர்ந்தனர். இராணுவத்தினர் குண்டர்கள் 12 பேரை கைது செய்தனர். மற்றவர்கள் ஓடிவிட்டனர். ஜெயசிங்காவும், கபிலரத்ன, பேராதனை வளாக ஊழியர் விஜயரத்ன வீரசேன, ரணசிங்க ஆகியோர் இருந்தனர். இவர்கள் எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் வசிப்பவர்கள். நானும் தம்பியும் அவர்களை அடையாளம் காட்டினோம், இரண்டு தாக்குதலிலும் இவர்கள் பங்குபற்றினர். இராணுவம் என் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தது. இவர்களை கண்டிபொலிஸில் ஒப்படைக்கப்போவதாக கூறினார்கள்.

கண்டி அகதிகள் முகாமிற்கு தமிழ் குடும்பங்களை செல்லுமாறு இராணுவத்தினர் ஆலோசனை கூறினர்.

**குண்டர்கள் விடுதலை**

பஸ்ஸின் பின் சீட்டில் எங்களை இருக்கும்படியும், முன்சீட்டில் குண்டர்களை கொண்டு செல்லப்போவதாகவும் இராணுவத்தினர் கூறினர்.

பஸ் சாரதி பண்டாவுடன் இராணுவத்தினர் கதைத்தனர். அதன்பின் கைதுசெய்த 12 குண்டர்களையும் விடுதலை செய்தனர்.

கமிஷனர்: (என்ன) -இராணுவத்தினர் குண்டர்களை விடுதலைசெய்தனர். பஸ்சாரதி பண்டா சுதந்திரக்கட்சி முன்னாள் உதவி அமைச்சர் எச். என் நவரத்னாவின் சகோதரர்.

அதன்பின் நாங்கள் பஸ்ஸில், இராணுவத்துடன் முகாமிற்குச் சென்றோம். 5 நாட்கள் இருந்தோம். பொலிசார் குண்டர்களைக் கைதுசெய்யவில்லை நான் கண்டி மாவட்ட இணைப்பு அதிகாரியிடம் புகார் செய்தேன். குண்டர்களை இராணுவத்தின் உதவியுடன் உடன் கைதுசெய்யுமாறு அவர் கடும் உத்தரவு பிறப்பித்தார். கொள்ளைப் பொருட்களையும் கண்டுபிடிக்கும்படியும் கட்டளையிட்டார். எனக்கு 1,39,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. கொள்ளைப் பொருட்களில் சில மீட்கப்பட்டன. அவை சேதமடைந்த நிலையிலிருந்தன.

நான் இராணுவம், பொலிசாருடன் கொள்ளைபோன பொருட்களைத் தேடச் சென்றேன். பொலிஸ் கான்ஸ்டபிள் வீடு உட்பட அப்பகுதியிலுள்ள பல வீடுகளிலிருந்து என் பொருட்கள் மீட்கப்பட்டதையிட்டு ஆச்சரியப்பட்டேன்.

மக்களின் முழு வாழ்நாளின் உழைப்பையும் ஒரு சில மணி நேரத்திற்குள் பூஜ்யமாக்கிவிட்ட இந்தக் காட்டுமிராண்டித்தனமான ஆத்திரமூட்டப்படாத தாக்குதல் சம்பவத்தில் கலந்துகொண்ட ஆட்களின் பொதுவான அறிவின் போக்கையே இது எடுத்துக்காட்டுகிறது.

## தமிழரைப் பிடித்து வருகிறோம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் கல்விக்கந்தோரில் கடமையாற்றிய அங்கயராசா ஜெயராசா சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த மிகுதிப் பகுதி இங்கே தரப்படுகின்றது. இதன் முன் பகுதி நேற்று வெளியாயிற்று.

வழியில் ஒரு சிங்களவர் எங்களைக் காட்டி யார் இவர்கள்? என்றார், 'தமிழரை பிடித்து வருகின்றோம்' எனக் குண்டர்கள் கூறினார்கள், உடனே அவர் ஓடிவந்து கையால் அடித்தார். அவரைத் தொடர்ந்து குண்டர்களும் தாக்கினார்கள்

சில நிமிடத்தில் 2 சிங்களப் பெண்கள் வந்தனர். எங்களைக் காட்டுக்குள் ஓடச்சொன்னார்கள். நாங்கள் காட்டுக்குள் ஓடினோம். ஒரு குடிசையொன்று இருந்தது. அங்கிருந்தவர் யார்? என்று கேட்டார். சிவத்தம்பியும் அப்போது வந்தார். அவரை ஒளிக்கும்படி கூறினேன், அவர் மரத்துக்குள் ஒளித்துவிட்டார். பின் வேறுபலர் வந்தனர். டோர்ச்லைட் அடித்து எங்களைத் தேடினார்கள்.

குண்டர்கள் எங்களைக்கண்டு பிடித்துவிட்டனர், இழுத்துச் சென்று உருட்டி உருட்டி அடித்தனர். நான் மயக்கம் அடைந்துவிட்டேன். உடம்பெல்லாம் வலி, எழும்பிய பின்பும் அடித்தார்கள், றோட்டில் இழுத்தனர். பின் இரும்புக் கம்பியால் அடித்தனர்.

2 சிங்களப்பெண்கள் வந்து அடிக்கவேண்டாமென்று தடுத்தனர்.

அங்கு ஒரு சிறு கோவில் இருந்தது. நான் மெதுவாக எழுந்துசென்று கோவிலுக்குள்புகுந்துமறைந்துவிட்டேன் அங்குள்ளவர் தண்ணீர் தந்தார் காசு தரலாம் பஸ்ஸில் போகும்படிசொன்னார்கள்.

அப்போது சில சிங்கள உத்தியோகத்தர்கள் அவ்விடம் வந்து தங்கள் விடுதிக்கு என்னைக் கூட்டிச்சென்றனர்: சாரம், துவாய் தந்தனர் தங்கள் கட்டிலில் படுக்கச்சொன்னார்கள்.

**காணவில்லை**

அக்கரைப்பற்றைச் சேர்ந்த தாவூதுலெவ்வை சரீபுத்தீன் சென்ற 8-3-78 முதல் காணவில்லை. இவர் பொது நிறம், வயது 12. முழங்காலின் கீழ் சிறுகழலையுண்டு. இவரைப் பற்றிய தகவல்கள் தருபவர்களுக்கு அல்லது ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். விபரங்களுக்கு: M.I மார்க்கான் ரெயிலர், 59, கே. கே. எஸ். றோட், நகைக்கடை, யாழ்ப்பாணம். 8738

**மரண அறிவித்தல்**

சங்கரம்பிள்ளை சுப்பிரமணியம்

அராலி தெற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், திருமதி தங்கம்மா, சின்னத்துரை, சிவகுரு (முன்னாள் அதிபர், கைத்தொழில் அமைச்சு, கணக்காய்வாளர், தன்சானு காட்பரேசன்) நடராஜா (மாவட்ட ஆஸ்பத்திரி மூளாய்தீவு) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற அராலி சின்னத்துரை, திருமதி பரமகல்யாணி, தனலக்சுமியின், மாமனுமாவார், அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (12-3-78) மாலை 4மணிக்கு 2க்கு, நாச்சிமார் கோவிலடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைகாக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 8740

## நன்றி நவில்கின்றோம்

29-01-78 ஞாயிற்றுக்கிழமை நடந்தேறிய எமது திருமண வைபவத்தை சிறப்பிக்க வருகை தந்து கௌரவித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது இதயம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் தனித்தனியாக தங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து நன்றி கூறமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

நன்றி என்றும் உங்களுடையது.

திரு, திருமதி சச்சிதானந்தன்.

நயினாதீவு 6

8739

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் தொடர்பு... யாழ்ப்பாணம் வெலிங்டன் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram ...du. Telephone 389. Registered as a Newspaper in Srilanka